மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.
முன்னிலை : திருமதி.P.கோபால அரசி, பி.எஸ்சி., பி.எல்.
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.
2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ம் நாள் புதன்கிழமை.
I.A. No. 460, 461/2024 in OS.No.61/2023

சிவலிங்கம் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

குணசீலி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது அன்று 23.10.2024 இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.வில்லின் பெலிக்ஸ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கவிராஜ்.S.ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ள சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் ஆய்வின் கீழ் இருந்தும் வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கை மறுதிறப்பு செய்து, மனுதாரர்கள் தரப்பில் மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி உ.வி.மு.ச. கட்டளை 7, விதி 14 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:–**

(1.1) இம்மனுவின் மனுதாரர், அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதார்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள பிராதையும் இந்த அபிடவிட்டின் ஒரு பாகமாக ஏற்றுக்கொள்ளும்படி வணக்கமாய் பிராத்திக்கிறார். தாவா வழக்கு மனுதாரரின் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது.

(1.2) மனுதாரர் தரப்பில் உண்மை நிலவரங்களை தெரியப்படுத்தக்கூடிய

எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஆவண எண்:1341/2011ன் முந்தைய ஆவணமான 10.01.1970 தேதிய சாத்தான்குளம் சார்பதிவக கிரைய ஆவண எண்:189/1970–ன் சார்பதிவக நகல் தற்போதுதான் கிடைத்துள்ளது. மேற்படி ஆவணமானது மனுதாரர் தரப்பு சாட்சியை மேலும் வலுசேர்க்கக்கூய மிக முக்கிய ஆவணமாகும். எனவே மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

## 2) <u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரைச் சுருக்கம் :</u>

(2.1) மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. உண்மையில், மனுதாரர்/வாதி மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும், தாவா வழக்கிற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. மனுதாரர்/வாதி தாவா வழக்கை திசை திருப்பும் நோக்கத்தில் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்களை தாவா வழக்கில் தாக்கல் செய்து அதன் மூலம் தாவா வழக்கின் தன்மையை மாற்ற முயற்சித்து வருகின்றார்.

(2.2) மனுதாரர் /வாதி தாவா வழக்கில் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ள நிலையில் தனக்கு சொந்தமான சொத்திற்கு அதன் உரிமையை காட்டும் ஆவணத்தை கொண்டு மட்டுமே பரிகாரம் தேட இயலும். ஆனால் மனுதாரர்/வாதிக்கு தொடர்பில்லாத மேற்படி ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்து அதன் மூலம் ஆதாயம் தேட முயற்சி செய்து வருகின்றார். மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணத்திற்கும் மனுதாரர்/வாதிக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது.

(2.3) மனுதாரர்/வாதிக்கு தொடர்பில்லாத மேற்படி ஆவணத்தை மனுதாரர்/வாதியால் மேற்படி வழக்கில் குறியீடு செய்ய இயலாது. அதனிமித்தம் தாவா மனு தள்ளுபடி செய்யப்படத்தக்கதாகும். இதில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி முற்றிலும் மறுக்கின்றார். எனவே மனுதாரர்கள் மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

4) <u>**தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை :–**</u>

அசல் வழக்கை மறுதிறப்பு செய்து, மனுதாரர்கள் தரப்பில் மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்ய உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா?

5) <u>**தீர்வு :**</u>

(5.1) அசல் வழக்கானது, பிராது தபசில் கண்ட சொத்து வாதிக்கு கடந்த 24.11.1971 தேதிய பதிவு கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டு, பிராது தபசில் சொத்தை சுற்றி முள் வேலி அமைத்து அனுபவம் செய்து வரும்நிலையில், பிரதிவாதி 10.06.2023 முதல் வாதி அமைத்த முள்வேலியை அப்புறப்படுத்த முயற்சித்து வருவதால், வழக்கு சொத்துகளை வாதிகள் சுமூகமாக அனுபவிப்பதற்கு பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி 16.06.2023 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5.2) அசல் வழக்கில் 01.03.2024 ல் எழுவினாக்கள் வனையப்பட்டு, 20.03.2024 முதல் 29.04.2024 வரை வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளநிலையில், வாதி தரப்பில் வழக்குரையை சீர்திருத்த செய்ய வேண்டி இ.ம.எண்.230/2024 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(5.3) பின்னர், 04.09.2024 ல் வழக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்ட நிலையில், வாதி தரப்பில் ஆஜரில்லாததால் அசல் வழக்கானது வாதியின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டு, இவ்வழக்கானது எதிர்கோரிக்கை

மனுதாரர் தரப்பு விசாரணைக்காக வழக்கு வாய்தா போடப்பட்ட நிலையில், வாதியால் அசல் வழக்கை கோப்பிற்கு எடுக்க வேண்டி, இ.ம.எண்.383/2024 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு, அசல் வழக்கு மீண்டும் கோப்புக்கு எடுக்கப்பட்டள்ளது.

(5.4) பின்னர், அசல் வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு, 25.09.2024 ல் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக 30.09.2024 முதல் 16.10.2024 வரை வாய்தா போடப்பட்ட நிலையில், வாதி தரப்பில், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஆவண எண்:1341/2011ன் முந்தைய ஆவணமான 10.01.1970 தேதிய சாத்தான்குளம் சார்பதிவக கிரைய ஆவண எண்:189/1970–ன் சார்பதிவக நகலை குறியீடு செய்ய வேண்டி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5.5) எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்/வாதி மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும், தாவா வழக்கிற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்றும், மனுதாரர்/வாதி தாவா வழக்கில் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதால், அவருக்கு சொந்தமான சொத்திற்கு அதன் உரிமையை காட்டும் ஆவணத்தை கொண்டு மட்டுமே பரிகாரம் தேட இயலும் என்றும், ஆனால் மனுதாரர்/வாதிக்கு தொடர்பில்லாத மேற்படி ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்து அதன் மூலம் ஆதாயம் தேட முயற்சி செய்து வருகின்றார் என்றும் மறுக்கப்பட்டுள்ளது.

(5.6) இம்மனுவில், மனுதாரர்கள் 10.01.1970 தேதிய சாத்தான்குளம் சார்பதிவக ஆவண எண்.189/1970 பதிவு கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தங்களது தரப்பில் மேற்கொண்டு குறியீடு செய்ய கோரியுள்ளனர். மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணம் பதிவு கிரைய ஆவணமாகும். மேலும், மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணத்தின் சார்பதிவக சான்றிட்ட

நகலினை குறியீடு செய்ய கோரியுள்ளதால் மேற்படி, ஆவணத்தின் செல்லுத்தன்மை மற்றும் தொடர்புடைமையை தவிர்த்து மேற்படி அசல் வழக்கை மறுதிறப்பு செய்து, மேற்படி ஆவணத்தை குறியீடு செய்து கொள்ளலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, இம்மனுக்கள் செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரி பார்க்கப்பட்டு 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 06ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-P.கோபால அரசி, 06.11.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

<u>இரு தரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை</u>

ஒம்/-P.கோபால அரசி, 06.11.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

District Munsif Court,
Sathankulam.
I.A. Nos.460,461/2024
in OS.No.61/2023
Fair order
Date: 06.11.2024